சங்கவியல்

# ஆசிரியர்களுக்கான வழிகாட்டி

## பகுதி II

# Unionism
# A Module for Teachers
## Part 11

## சங்கவியல்
## ஆசிரியர்களுக்கான வழிகாட்டி
## பகுதி 11

**in Partnership with**

**Education international and**

**Canadian Teacher's Federation**

***Tamil Translation By***

***S. Balasubramaniyam***

***(CTTU Vice President)***


உள்ளடக்கம்

1. சங்கத்தின் அவசியமும் அதன் தொழிற்பாடும்

2. சங்க உருவாக்கம்

3. சங்கத்திற்கான தேவைப்பாடும் தொழிற்பாடுகளும்

4. ஒரு தொழிற்சங்கத்தில் இணைதல்



# அத்தியாயம் 1.

## சங்கத்தின் அவசியமும் அதன் தொழிற்பாடும்

### 1. சங்கம் என்றால் என்ன?

தொழிலாளர்களின் தொழிலை பாதுகாப்பதும் அங்கத்தவர் களிடையே சமூக, அறிவு சார்ந்த, பொருளாதார, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதான ஒரு அமைப்பாகும்.

- சமூக நலன் என்பது கல்விசார் செயற்பாடுகள், கலாசார செயற்பாடுகள் , விளையாட்டு , நலன்சார்ந்த செயற்பாடு களையும் உள்ளடக்கியதாகும்.

- .அறிவாற்றல் சார்ந்த செயற்பாடானது மேலதிக கல்வியை தொடர, தொழில்வாண்மையை இற்றைப்படுத்தேவையான விருத்தி செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்

- பொருளாதார செயற்பாடானது ஊதியம், வேலை நிலைமைகள் விருத்தியையும், முதலீடுகள் கூட்டுறவு முயற்சிகள், சட்ட தேவைகள், சமூக பாதுகாப்பு தொழிலாளர்களின் இழப்பீட்டு தொகைகளையும் உள்ளடக்கியதாகும்.

- ஆரசியல் ஈடுபாடானது ஜனநாயக பண்பு விழிப்புணர்வு நாட்டின் அபிவிருத்தி, பிரசையினதும் வாக்காளரினதும் உரிமையையும் உள்ளடக்கியதாகும்.

### 2. ஏன் எமக்கு ஒரு சங்கம் தேவை?

- வலிமையான ஒரு சங்கத்தால் மட்டுமே எமக்கு பாதுகாப்பு உரிமையையும், அங்கத்தவர்களுக்கு கூட்டாகவும் . தனியாகவும் உதவ முடியும்

- ஒரு பலம் வாய்ந்த சங்கத்தாலேயே வேலைநிலைமைகளை யும் வாழ்க்கை நிலைமைகளையும் அபிவிருத்தி செய்ய முடியும்.

3. ஒரு சங்கத்தின் அடிப்படை கோட்பாடுகள் யாவை?

ஒரு சங்கத்துக்கு ஐந்து அடிப்படைக் கோட்பாடுகள் காணப்படுகின்றன.

1. ஒருமைப்பாடு 2. சுதந்திரம் 3. ஜனநாயகம்
4. ஒற்றுமை 5. வகைக்கூறல்

1. ஒருமைப்பாடு:

ஒற்றுமையே ஒரு சங்கத்தின் உயிர்நாடியாகும். சகோதரத்துவம் இல்லாமல் ஒரு சங்கம் இயக்க பாடுடைய தாக அமைய மாட்டாது.




- ஒற்றுமை என்பது ஒவ்வொருவரும், சுரண்டலுக் குள்ளாக்கப்படும் மற்றவர்களுக்காக ஒருங்கிணைந்து போராடுவதாகும். பொருளாதாரரீதியாக பாதிப்புக்கு ள்ளாவதை பலப்படுத்துவதாகும்.

- ஒற்றுமை என்ற கருத்து தனது சங்க அங்கத்த வர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட தோன்றலல்ல.

2. சுதந்திரம்

- ஒரு அமைப்பு என்றவகையில் சுயமாக இயங்க வேண்டும். வெளிதாக்கங்களால் ஆதிக்கம் செலுத்தக்

  கூடியதாக அமையவிடக்கூடாது. எந்த சந்தர்ப்பத்திலும் அதன் இருப்பை பாதுகாக்க வேண்டும்.

- தொழிற் சங்கமானது அரசின் கட்டுப்பாடுகளிலிருந்து விலகி சுதந்திரமாக இயங்க வேண்டும்.

- அரசுடன் தொடர்புகளைப் பேணுமாயின் தனது இலக்கை அடைய முடியாது.

- அரசியல் கட்சிகளிலிருந்து சுதந்திரமாக இயங்க வேண்டும். அரசியல் கட்டுப்பாடுகளிருந்து விலகிக் காணப்படுவதால் மட்டுமே சுதந்திரமாக இயங்க முடியும்.

- அரசியல் கட்சிகளிலிருந்து விலகி சுதந்திரமாக இயங்க வேண்டுமென்ற கொள்கையானது தொழிற்சங்கம் அரசியல் செயற்பாடுகளிலிருந்து முழுமையாக விலகியிருத்தலைக் குறிக்காது.

- ஆனாலும் சுதந்திரமான இயக்கம் என்ற கொள்கையை பேணுவதாக அமைய வேண்டும். தொழிற் சங்க நட வடிக்கையின் போது ஒருபக்க சார்பானதாக அமைய கூடாது. தொழிற்சங்க இயக்கம் எந்தவொரு கட்சிக்கும் அடிமையாகக் கூடாது.

- ஒரு தொழிற்சங்கம் தொழில் தருனரிலிருந்தும் சுதந்திர மாக இயங்க வேண்டும்.

- ஒரு தொழிற்சங்கம் தனிநபர்களின் அல்லது குடும்பத்தின் நன்மைக்காக செயற்படக்கூடாது. இது தொழிலாளர்களின் அமைப்பாகும். இது தனிப்பட்டவரின் சொத்தோ அல்லது தொழில் தருனரின் குடும்ப வியாபாரமோ அல்ல.

- இந்த அமைப்பில் தொழிலாளர்களே எஜமானர்களாவர். இதனை வழிப்படுத்துபவர்களும் கட்டுப்படுத்துபவர்களும் அவர்களே. ஆவர்களது அபிவிருத்திக்காகவே செயற்பட வேண்டும்.

- உண்மையிலேயே சங்கத்தின் இலக்கை நோக்கியசெயற பாடு அமைய வேண்டுமாயின் அதனது வழிப்படுத்தல்கள், கட்டுப்படுத்தல்கள், புறசக்திகளாளோ, அரசாங்கத்தாலோ, அரசியல்கட்சிகளாலோ அல்லது தொழில் தருனராலோ அன்றி சுதந்திமானதாக இருக்க வேண்டும்.




- சுதந்திமான கொள்கை என்ற தோற்றப்பாடானது தொழிற்சங்கத்தின் நிதி சுதந்திரத்திலும் தங்கியுள்ளது.

- தனது சொந்த வளத்தில் தங்கியிருந்தால் மட்டுமே ஒரு சங்கம்நிலையான தன்மையையும்,முதிர்சிபெற்றதாகவும், முழுச்சுதந்திரமாக செயற்படமுடியும்.

- சுய நிதியிடலின்றி எந்தவொரு சங்கமும் தனித்துவமாக இயங்க முடியாது.

3. ஜனநாயகம்

- தொழிற்சங்கத்தின் ஜனநாயகமென்பது தொழிற்சங்கத்தின் செயற்பாட்டில் எல்லா அங்கத்தவர்களும் சம உரிமையும், பொறுப்பும் கெண்டதாக அமைய வேண்டும். அது தனிநபரிக்கு வரபிரசாதமாகவோ அல்லது பாரபட்சமாகவோ இருக்கக்கூடாது.

- ஏள்லா முக்கிய தீர்மானங்களும் பெரும்பான்மை வாக்கு களுடன் நிறைவேற்றப்பட்டதாக அமைய வேண்டும்.

- சங்கத்தின் தலைவர்கள் சுயமாக நியமிக்கப்பட்டவர்க ளாக இருக்ககூடாது. தமது அங்கத்தவர்களால் இரகசிய வாக்கெடுப்பின்மூலம் தெரிவு செய்யப்பட்டவர் களாக அமைய வேண்டும்.

- தெரிவு செய்யப்பட்டவர்கள் தமக்கு வாக்களித்தவர்களு க்கு வகைக் கூறக் கூடியவர்களாக செயற்பட வேண்டும்.

- ஒரு ஜனநாயக தொழிற்சங்க இயக்கத்தில் தலைவர்கள் எஜமானரல்ல.

- பிரதான தீர்மானம் நிறைவேற்றுபவர்கள் சங்க அங்கத் தவர்களாகும். தனித்துவம் அங்கத்துவரிலேயே தங்கியு ள்ளது. இணைபவர்கள் சங்க நிலைமையை பேணுவர்

- தேர்தலை விட ஜனநாயகம் விஞ்சியது. அது எல்லா அங்கத்தவர்களையும் சங்க செயற்பாட்டில் பங்களிப்பு வழங்கும் நபர்களாக மாற்றியமைக்கும்.

4. ஒற்றுமை

- நாங்கள் பிரிந்து பாழாகின்ற போது ஒற்றுமையே நம்மை காக்கும்.

- சங்க செயற்பாட்டில் பிரிவில்லாமல் ஒற்றுமையாக இருப்பதை விட வேறுவழியில்லை. ஆனால் கட்சியில் ஒற்றுமை நிலவும். அவ்வாறு ஒற்றுமை அரசியலில் காணப்படுவது வரவேற்கதக்கது.

- "வேற்றுமையில் ஒற்றுமை" என்பதே நிலையான ஒற்றுமையின் சூத்திரமாகும்.

- தொழிற்சங்கத்தில் ஒற்றுமையானது தொழிலாளரின் சுயமாக தீர்மானத்தினால் கட்டியெழுப்பட வேண்டிய தொன்றாகும். அவர்களுக்கு மட்டுமே எவ்வாரான அமைப்பு இருக்க வேண்டுமென்ற முடிவெடுக்க கூடியதாயிருக்க வேண்டும்.

5. வகைக்கூறல்

- தொழிற்சங்கவியலின் உண்மையான வதாமானது அங்கத்தவர்களினதும் சமூதாயத்தினதும் வகைக்கூற லானது 5 வித கொள்கையாகும்.

- முடிந்தவரை சாதகமான பலாபலனை பெற்றுக் கொடுப்பதற்காகவும், அங்கத்தவர்களினது தேவையை பூர்த்திசெய்வதற்காகவும் தைரியமாகவும் உற்சாகமாகவும் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கே சங்கம் போராடுகின்றத.

- முடிந்தவரை வினைத்திறனாக சங்க நிர்வாகிகள் தம்மை தேர்ந்தெடுத்த செயற்பாட்டிற்காக அர்பணித்தல் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- தேவை ஏற்படும் போது வேலைநிறுத்தம் மற்றும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு தமது கோரிக்கைகளைப் பெற்றுக் கொடுப்பதில் பொறுப்புடைய எந்த தொழிற் சங்கமும் பின்னிற்காது.

- இருப்பினும் தமது அங்கத்துவத்தை தேவையற்ற வகையில் பயன்படுத்தி தொழில் புரியும் இடத்தில் கோபாவேசமான செயற்பாடுகளை உருவாக்குவதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

- தமது அங்கத்தவர்களுக்கும் தொழிலாளர் அணைவருக்கும் நன்மை ஏற்படுத்திக் கொடுக்கத்தககதான செயற்பாட்டில் ஈடுபடுவதே பொறுப்பான சங்கத்தின் முதலாலதும் முக்கியமானதுமான நோக்கமாக இருக்க வேண்டும்.

இருப்பினும் ஒரு சில சங்கங்களானது சேவையாளரின் பிரதிநிதியாக போலியாக முகமூடி அணிவதோடு சேவை யாளர்களின் தேவைக்கு ஏற்ப செயற்படுவதில்லை.

கட்டுப்பாடு சங்கத்தின் நல்ல பெயருக்கு பாத்திரமாக அமையாது. சங்கவியல் சுயாதீனம், ஜனநாயகம்,ஒற்றுமை, வகைக்கூறல் என்ற கொள்கைகள் அடிப்படையில் கட்டி யெழுப்பப்படுகின்றது அதுவே சங்கத்தின் செயற்பாட்டை பிரகாசிக்க செய்கின்றது.

4.. உண்மையான சங்கம் உருவாவது எப்படி?
உண்மையான சங்கமானது:

- தொழிலாளர்களுக்காக அவர்களாளேயே உருவாக்கப் பட்டது
- சேவைபெறுபவர்களால் பிரதிநிதித்துவப்படுத்துவது
- தொழிலாளர்களால் உருவாக்கப்பட்டு, வழிநடாத்த ப்பட்டு கட்டுப்படுத்தப்படுவது.
- தொழிலாளர்களின் சமூக பொருளாதார அரசியல் நிலைமையை உயர்த்துவதற்க்கு போராடல்
- எல்லா நடவடிக்கைகளிலும் தெளிவான, நிலை பேரான, அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்

5.. உண்மையான தொழிற்சங்கத்தின் நோக்கங்களை மீறும் சந்தர்ப்பங்கள்

- சங்கத்தில் பிறசக்கிகளின் ஊடுறவுகள்
- மோசடியும் ஊழலும்
- ஜனநாயகத்தின் தன்மை குறைந்துக் காணப்படல்
- அங்கத்தவர்கட்கு சேவை வழங்காமலிருத்தல்
- அங்கத்தவர்களின் தேவைக்கு ஏற்ப சேவை வழங்காமை.

6. ஒரு தொழிற்சங்கத்தின் பொறுப்புக்கள் யாவை?

- சம்பளங்களையும், வேலை நிலைமைகளையும் அபிவிருத்தி செய்தல்.

  சங்கத்தின் பிரதான நோக்கமானது தமது அங்கத்தவர்களின் வாழ்க்கைதரத்தையும் வேலை நிலைமைகளையும் உயர்த்துவதேயாகும். இந்த இலக்கை அடைவதற்கு சுதந்திரமான பேரம்பேசுதலுக்கு புதிய அங்கத்தவர்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

- அங்கீகாரம்
  தொழிற்சங்கம் தனது பேரம்பேசுதலை ஆரம்பிக்க முன்னர் அது சேவையாளர்களின் அங்கீகாரத்துக்கு விடல் வேண்டும். அவை சேயையாளர்களின் பெரும்பான்மையுடன் அல்லது ஒருகுறிப்பிட்ட தரத்தை சார்ந்தவர்களின் பெரும் பான்மையான்மையினரின் அங்கீகாரம் உடையதாக அமைய வேண்டும்

- கூட்டுப் பேரம் பேசுதலின் நுட்பம்

  தொழிற்சங்கமானது தொழில்தருனருடன் சம்பளம்,தொழில் நிலைமைகள் பற்றி பேரம்பேசும் போது அதற்காக கூட்டுப் பேரம் பேசும் நுட்பம் பின்பற்றுதல் அத்தியாவசியமாகும்

- தனிநபர் மனக்குறையும் பிரச்சிகைனகளும்

  பதவி உயர்வு தொடர்பான விண்ணப்பம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, பதவி இடைநிறுத்துல் வேலைப்பயிற்சி போன்றவிடயங்களில் அங்கத்தவர்களுக்கு உதவியளித்தல் வேண்டும்.

- கல்வி

தமது அங்கத்தவர்களின் கல்வி தரத்தை பொதுவாக உயர்த்துவது தொழிற்சங்கத்தின் பிரதான செயற்பாடாகும். இது பொதுகல்வியாகவோ, அல்லது தொழிற்சங்க கல்வியாகவோ அமையலாம். சங்கத்தின் கொள்கைகள், சங்க நிர்வாகிகளின் பொறுப்புக்கள் கடமைகள், பேரம்பேசுதலின் நுட்பங்கள் போன்றன தொழிற் சங்க கல்வியினூடாக பெற்றுக் கொடுத்தலாகும். இதனால் அங்கத்தினர்கள் சங்க நடவடிக்கைகளை வினைத்திறனாக இயக்க வழிவகுக்கும்.

- தொழிற்சங்க தொடர்பாடல்

தொழிற்சங்கம் தனது அங்கத்தவருடன் தொடர்பாடல் மேற்கொள்வதில் பிரதான பங்கு வகிப்பது பத்திரிகை சஞ்சிகை, கையேடு, சுற்றுநிருபம், துண்டு பிரசுரம், நிர்வாகிகள் தமது அங்கத்தவருடன் நேரடியாக சந்தித்தல் , விசேட கூட்டம் போன்றனவாகும்.

ஒவ்வொரு சங்கமும் தொடர்ச்சியான சஞ்சிகை அல்லது செய்திபத்திரிகை தமது அங்கத்தவருக்காக பயன்படுத்த வேண்டும். இது தமது அங்கத்தவருடன் நடைமுறைவிடயங்களை முன்வைப்பதற்கு பிரதான காரணியாக அமைகின்றது.

- நலன்புரி சேவைகள்

சங்கம் நலன்புரி சேவைகளாக மரணாதாரநிதி, புலமைப்பரிசில், கல்வி வெகுமதி போன்றனவற்றை நடைமுறைப்படுத்தலாம்.




- சட்ட உதவியும் ஆலோசனைகளும்
  தொழிலாளர் இழப்பீடு, தொழில் விபத்து, தொழில் பதவி யிறக்கம். மீண்டும் சேவையில் ஈர்த்தல் போன்றவை தொடர் பாக சட்ட ஆலோசனையும் சட்ட உதவியும் தமது அங்கத்த வர்களுக்கு தொழிற் சங்கம் ஊடாக செய்யப்படுகின்றன.

- அங்கத்தவர்களுக்கு தனிப்பட்டரீதியில் உதவி செய்தல்.
  அங்கத்தவர்களுக்கு தனது தொழில் தொடர்பாக தொடர்ச்சியாக வழிகாட்டல் உதவிகள் அவசியப்படும். முகாமையானது ஒழுக்காற்று நடவடிக்கைகளாக பதவி இறக்கம், பழிவாங்கள் போன்ற நடைவடிக்கையை அங்கத்தவருக்கெதிராக மேற்கொள்ளும் போது அதற்கெதிராக பிரதிநிதித்துவப்படுத்தல் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இவ்வகையான சந்தர்ப்பத்தில் சங்கம் தமது அங்கத்தவர்களை பாதுகாக்க வேண்டும்.

- ஆய்வு
  சங்கத்தின் பேரம் பேசலுக்கு தேவையான ஆய்வுத் தகவல்கள் மற்றும் பின்னனி விபரங்கள் வழங்குவதற்கு ஆய்வுவசதிகள் சங்கத்தால் தாபிக்கப்பட்டிருத்தல் வேண்டும்

- ஆழமான சமூக, பொருளாதார அரசியல் பிரச்சனை. ஒட்டு மொத்த சம்பளம் பெறுவோர்களின் பொது சமூக பொருளாதார நிலைமைகளை சங்கத்தின் கவனத்தில் கொள்ள வேண்டும். விலை அதிகரிப்பு, பொது ஊதிய மட்டம் , சமூக பாதுகாப்பு ஒதுக்கீடு கல்வி கொள்கைகள் போன்றன பற்றி அபிவிருத்தியை கைக்கொள்ள வேண்டும்

7. தொழிற்சங்கத்தின் உரிமைகள் யாவை?
   - அங்கத்தவர் சார்பாக பிரதிநிதிதுவப்படுத்தவும் இனக்கப் பாட்டுக்குவரவும் உரிமை உண்டு.
   - கைத்தொழில் பினக்குகள் நீடிக்கும் போது அவற்றில் தலையிட உரிமையுண்டு.
   - தொழிற்சங்க சட்டத்தில் உள்ள உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்க உரிமையுண்டு.
   - தொழிற் சங்கம் அரசாலோ அல்லது தொழில் தருனராலோ எந்த தலையீடுமின்றி சுதந்திரமாக செயற்பட அனுமதிக்க வேண்டும்.
   - தொழிற்சங்கத்துக்கு பின்வரும் உரிமைகள் உண்டு.
     - தனியான யாப்பை கொண்டிருத்தல்
     - தேர்தல் வைப்பதற்கான சுதந்திரம்
     - தமது செயற்பாட்டை ஒழுங்கமைக்கவும் , நிர்வகிக்கவும்
     - தமக்கேயுரித்தான கொள்கைகளையும் நிகழ்ச்சிக ளையும் தயாரிக்க.

## மேய் தினம்

மேய்தின வரலாறு அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் ஆரம்பிக்கப்பட்டது. அது அமெரிக்க தொழிலாளர்களின் நாளந்தம் 10-12 மணித்தியாளம் வேலை செய்ய வேண்டி யிருந்த 1880 ம் ஆண்டு காலத்தினாலாகும். அப்போது நாளாந்தம் 8 மணிநேர வேலை வழங்க கோரி போராட்டம் நடாத்தப்பட்டது.

சேவையாளர்கள், 1886 மேய் 1 ம் திகதி தமது சேவையை 8 மணியாக தீர்மானிக்க மறுத்தால் தொடர்ச்சியாக தமது வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளும் ,என்ற தீர்மானத்தை அமெரிக்க தொழிலாளர் ஒன்றியம் 1884ம் ஆண்டு மாநாட்டில் தீர்மானித்தது. இதன்படி 3.50,000

தொழிலாளர்கள் 1886ல் மே 1ல் வேலைநிறுதத்தில் ஈடுபட்டனர். சிக்காகோ நகரத்தில் மட்டும் 40,000பேர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதுடன் முழு நகரத்தின் செயற்பாடும் செயலிழந்து போனது.

"மேகோர்மிக் ஹாவெஸ்டர் தொழிற்சாலையில்" தொழில் தருனர்கள் மேய் 3ம் திகதி பொலிஸாரின் உதவியுடன் இந்த வேலைநிறுத்தத்தை முறியடிக்க எடுத்துக் கொண்ட முயற்சியில் 6 பேர் சூட்டுக்கு இழக்காகியதுடன் பலர் காயப்பட்டு காணப்பட்டனர்.



பொலிசாரின் இந்த தாக்குதலை எதிர்த்து மேய் 4ம் திகதி "வைக்கோல் விற்பனை சதுக்கத்தில்" கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கூட்டம் மிக அமைதியாக நிறைவுற்றது. எப்படியாயினும் கூட்டம் கலைந்து செல்லும் தருவாயில் 180 பொலிசாருக்கு தலைமைவகித்து வந்த பொலிஸ் உத்தியோகத்தர் பலவந்தமாக கூட்டத்தை கலைக்க முயற்சி செய்தார். இந்த சம்பவத்தில் ஒருவர் பொலிசாரை நோக்கி கைக் குண்டு எறிந்தார். அதன் தாக்கமாக ஒரு பொலிசார் அந்த இடத்திலேயே உயிர் பிரிந்தார் . அத்துடன் மற்றும் சிலர் காயமடைந்தனர். (பின்னர் ஐவர் உயிரிழந்தனர்) பொலிசார்களின் எதிர் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் உயிர் நீத்ததுடன். அதிகமானோர் காயத்திற்குள்ளானார்கள்.

இதன் தாக்கமாக பார்ஸ்சன், நீப் , ஸ்பையிஸ் , பிட்டைன், ஸ்குவாய்ம், லிங், எங்கல், பிசர் ஆகிய தெரிவு செய்யப்பட்ட அமெரிக்க தலைவர்கள் மீது, பொலிசாரை கொலை செய்தமைகாக அரசால் குற்றப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

நீப் என்பவருக்கு 15 வருட சிறை வழங்கப்பட்டது. .லிங் சிறைச்சாலையில் தற்கொலை செய்துக்கொண்டதுடன் பார்சன், ஸ்பைஸ், ஏங்கள், பிசர் ஆகியோர் நவம்பர் 11ல் 1887ல் தூக்கிலிடப்பட்டனர்.

இவ்வாறு அமெரிக்க தொழிற்சங்க தலைவர்கள் தமது உயிரை தியாகம் செய்து அமெரிக்க தொழிலாலளர் களுக்கு மட்டுமன்றி மற்ற நாட்டு தொழிலாளர்களுக்கும் நாளாந்தம் 14 மணித்தியாள வேலையை 8 மனியாக குறைத்து வரலாற்றில் தடம் பதித்தனர்.

1889ல் முதல்தர தொழிலாள தலைவரகளால் பாரிஸ் நகரத்தில் நடாத்திய சர்வதேச மகாநாட்டில் நாளாந்தம் 8 மணிநேர வேலையை உலகம் முழுதும் நடைமுறைப்படுத்த ஒப்புதல் பெற்றதுடன் 1890 மேய் 1ம் திகதி அந்த சிரேஸ்ட்ட தலைவர்களால் மேற் கொள்ளப்பட்ட பரித்தியாகத்தை உலகமுழுதும் நினைவுகூற தீர்மானித்தனர்.

## அத்தியாயம் 11

### ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்குவது எவ்வாறு?

ஒரு வினைத்திறனான தொழிற்சங்கத்தை உருவாக்க பின்வரும் அடிப்படைகள் அவசியமாகும்.

- யாப்பு

ஒவ்வொரு தொழிற்சங்கமும் தன்னகத்தே யாப்பு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். யாப்பானது அதன் அமைப் பையும் நிர்வாக செயற்படு தன்மையும் வழிப்படுத்தும் ஒரு திட்டமாகும். அது சங்கத்துக்கேயுரிய தனித்துவத்தையும் கலாசாரத்தையும் கொண்டிருக்கும். யாப்பில் கூறப்பட்டுள்ளபடி சங்கத்தின் புதிய சட்டதிட்டங்களை உருவாக்குதல் , தமக்கேயுரிய வேலைமுறைமையினை கட்டியெழுப்புதல் தேர்தல் நடாத்துதல், நிர்வாகிகள் தெரிவு செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடல். காலத்துக்கு ஏற்ற வகையில் செயற்படவும், அங்கத்தவர்களினதும், ஆசிரியர்களினதும் தேவைக்கு ஏற்ப மாற்றங்களை யாப்பில் கொண்டுவரக் கூடியதாக இருக்க வேண்டும்.

சங்கத்தின் தோற்றமும், தனித்துவமும் யாப்பின்மூலம் கிடைப்பதால் எல்லா சங்கங்களும் யாப்பிற்கு உட்பட்டதாய் செயற்படுவதை உறுதி செய்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

- கட்டமைப்பு


ஆசிரிய சங்கம் தேசிய மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை எல்லா மட்டத்திலும் செயற்படவேண்டும். அவர்களது கிளைகள் நாடளாவிய ரீதியில் பரந்துபட்டதாக அமைய வேண்டும். அத்துடன் அவைகளுகட்கிடையில் பொருத்தமான இணைப்பு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

- அங்கீகாரம்

  ஒவ்வொரு தனி சங்கங்களின் அங்கத்தவர்களுக்கிடையில் பொருத்தமான அங்கீகாரம் இருத்தல் அவசியம். அப்போதுதான் பிரச்சினையை தமது அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்து அதற்கான தீர்வினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

- அங்கத்தவர்கள்:


  அங்கத்தவர்கள் எந்த ஒரு சங்கத்திலும் முக்கியமானவர்களாவர். அங்கத்தவர்கள் தொகையே ஒருசங்கத்தின் பலத்தையும் வினைத்திறனையும் தீர்மானிக்கின்றது. அதிக அங்கத்தவர் என்பது அதிக பலத்தைக் குறிக்கும். அது அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதாக உணர்கின்றனர் . அதனால் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுவதில் நம்பிக்கை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். அத்துடன் பெரும்பான்மையானவர்கள் ஒன்றாக இணைந்து கோரிக்கைகளை முன்வைக்கும் போது அதிகாரிகள் அவற்றை கருத்தில் கொண்டு உரிய தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.



சங்கத்தை வழிநடத்துபவர்கள் யார்?

நீங்களும் உங்கள் சக தொழிலாளர்களும் சங்கத்தை வழிநடாத்துபவர்கள்

- நீங்களே உங்கள் சங்க உத்தியோகத்தர்களை தெரிவு செய்கின்றீர்கள்
- நீங்களே உங்கள் சங்கத்தின் செயற்பாடுகளை செயற்படுத்துகின்றீர்கள்
- நீங்களே உங்கள் இனக்கசபைக் குழுவை தெரிவு செய்கின்றீர்கள்
- நீங்களே உங்கள் சங்கத்தின் தொடர்புகளை தீர்மானிக்கின்றீர்கள்.
- நீங்களே உங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றீர்கள்
- நீங்களே உங்கள் சங்கத்தின் முக்கிய தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் பெரும்பான்மை வாக்குகளுடன் தீர்மானிக்கின்றீர்கள்.
- நீங்களே உங்கள் பிரதிநிதிகளை சர்வதேச சங்கத்தின் மாநாட்டுக்கு தெரிவு செய்கின்றீர்கள்
- உங்கள் அங்கத்துவமே உங்கள் சங்கத்தின் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தின் இறுதி குரலாக ஒலிக்கின்றது.
- நீங்களே சங்கத்தின் உண்மையான எஜமான்.




அத்தியாயம் 111.

தொழிற்சங்கத்தின் தொழிற்பாடுகளும் அடிப்படை தேவைகளும்

தொழிற்சங்கத்தின் பிரதான தொழிற்பாடுகள் யாவை?

அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல்

தொழிற்சங்கமானது மனிதர்கள் சட்டப்படி இணைந்து செயற்படும் அமைப்பாகும். அதனை ஏற்றுக்கொள்ளலும் செயற்படுத்தலும் வினைத்திறனாக நிர்வாகம் செய்தலும் அங்கத்தவர்களாலேயாகும்.

தொழிற்சங்கத்தின் முகாமை மேல்மட்டம் தொடக்கம் கீழ் மட்டம்வரை மிக அர்ப்பணிப்புடன் செயற்படும், அங்கத்தவர்களை தெரிவு செய்வதும், செயற்பாடுகளை தேசிய ,சர்வதேசிய மட்டத்தில் முன்னேற்றகரமாக செய்வதும், அபிவிருத்தியை நோக்கி செயற்படுத்துவதும் முக்கியமாகும். பொதுதேவை கருதி குழுவாக இயங்கக்கூடியதும், அங்கத்தவர்களின் பிரயோகரீதியான செயற்பாட்டுடனும், சிறப்பான முகாமையும் உடைய சங்கமே எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அமையும்.

கூட்டமும் மகாநாடும்

சங்கத்தின் தீர்மானக்குழுவினால் செயற்படுத்தப்படும் அடிப்படை நிர்வாகம், வேறு கொள்கை ரீதியானவிடயங்கள், கீழ்மட்டங்களில் நிர்வாக செயற்பாட்டுக் குழுவுக்கு விரவி செல்லுக்கூடிய ஒரே ஒரு சந்தர்ப்பம் கூட்டமும் மகாநாடுகளுமாகும். அதிகபட்ச அங்கத்த வர்கள் ஒருவருக்கொருவர் தமது கருத்துக்களை பறிமாறிக் கொள் ளவும், தமது எண்ணங்களை, திட்டசெயற்பாடுகளை ,வினைத்திற னாகவும், விளைத்திறனாகவும் செயற்படுத்தவும், குழுக்கலந்துரை யாடல் மூலமும், ஒரே நேரத்தில் கருமமாற்வேண்டியவற்றை பகுத்தா ராயவும் இதுசாத்தியமாக அமைகின்றது. அத்துடன் குறைந்த செலவிலும் குறைந்த காலத்திலும் செயற்பாட்டுக்கு விட முடிகின்றது.

இனக்கப்பாடும் கூட்டுப் பேரம்பேசலும்

தொழிற்சங்கத்தின் பிரதான செயற்பாடு அரசாங்கத்துடன் தொழிற்சங்கத்தின் கொள்கைகள் தொடர்பாக தொடர்புகளை கலந்துரையாடல் மூலம் ஏற்படுத்திக்கொண்டு இருசாரருக்குமிடையில் முரன்பாடு ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாகும். இது சங்கத்தில் மிக வினைத்திறனாக பின்பற்ற முடிவதானது, அரசின் சட்டதிட்டங்களிலும், விதிமுறைகளிலும் நன்கு பரீட்சயம் பெற்ற அறிவும், பேரம்பேசலில் முதிர்சியும், கொண்ட சங்க அங்கத்தவர்களாலும் ,நபர்களாலுமாகும்.

தேர்தல்

சங்கத்தின் யாப்பு உள்ளக நிர்வாக தொழிற்பாடுகளுக்கு வழி காட்டும்.. அத்துடன் வரையறுக்கப்பட்ட காலத்திற்கு நிர்வாகிகளை தெரிவுசெய்ய சந்தர்ப்பம் கொடுக்கும். தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது நிர்வாக காலத்திற்குள் சங்கத்தின் இலக்கை அடைய கூடிய வகையில் தமது பொறுப்புக்கள், வகைக்கூறல் பெறுபேற்றை உயர்த்தக்கூடிய செயற்பாடுகள் போன்றவற்றை உணர்வ பூர்வமாக உணரச் செய்யும். இது ஒவ்வொரு அங்கத்தினரும் சங்க வளர்ச்சிக்காக எவ்வளவு கடின உழைப்பை வழங்குவதன் மூலம் வினைத்திறனானவர்கள் என்ற அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி வழங்குவதாக அமையும். அத்துடன் சங்கத்தின் இலக்கை அடைய ஏற்றுக் கொள்ளக்கூடிய பிரதிநிதிகளை முகாமைக் குழவை தெரிவுசெய்ய வாய்ப்பளிக்கின்றது.

வரவு பணத்தை அறவிடல்

தொழிற்சங்கத்தின் அடிப்படையான அத்தியாவசிய செயற்பாடானது அங்கத்தவர்களின் மாதாந்த சந்தாப்பணத்தை அறவிடுவதாகும். இது வினைத்திறனான தொழிற்பாட்டுக்கும், உள்ளக நிர்வாக முகாமைக் கும் அவசியமானது என்பதை, அங்கத்தவர்களின் பொறுப்பை உணரச் செய்வதற்கு அவசியம். அத்துடன் குறைந்த செலவில் நிதி வருகையை உறுதிப்படுத்தவும், அங்கத்தவர்கள் செலுத்தும் நிதியில் உச்சமான முதலீட்டை மேற்கொள்ளவும் வழிவகுக்கும்.

தொடர்பாடல்

பல்வேறுபட்ட முகாமை மட்டங்களுக்கிடையில் பல்வேறு தொடர்பாடல் திறன்கள் விரவிகாணப்படுவதால் நேரடியாக தொடர்புகளை ஏற்படுத்தி இயக்கப்பாடாக முகாமை செயற்பட வழிவகுக்கும்

மேல்மட்ட முகாமையில் ஏதாயினும் கொள்கை உருவாக்கப்பட்டால் அது வினைத்திறனாக கீழ்மட்ட முகாமைக்கு விரைவாக பரவ வேண்டும். ஒவ்வொருவரின் எண்ணங்கள், சிந்தனைகள், அடைவுகள் போன்றன மேல்மட்டம் ,இடைமட்டம், கீழ்மட்ட முகாமைகளுக்கு சென்றடைய வேண்டும்.. உயர்மட்டத்தில் காணப்படும் பலவிடயங்களை செய்திபத்திரிகை மூலம் பகிர்ந்தளிக்கலாம். அத்துடன் உயர்மட்டதினருக்கு தோற்றமளிக்கும் அடைவுகள் ஏனைய மட்டத்தினருக்கு வாராந்த செயலமர்வு மூலம் உணர்வுபூர்வமானதாக்கலாம்.

கூட்ட அறிக்கை தயாரித்தலும் குறிப்பெடுத்தலும்


சங்ககளின் சட்டவிதிக்கமைய முகாமைக்கிடையில் நடாத்தப்படும் எல்லா கூட்டங்களினதும் அறிக்கை பேணப்படல் அத்தியாவசிய மாகும். இது முகாமையின் திட்டமிடலுக்கேற்ப இலக்கை அடையவும், அவை நிறைவேற்ற வேண்டிய காலவரையறை, நோக்கத்தை அடைய பொறுப்பானவர்கள் யார், போன்றவற்றை அடையாளப்படுத்த

உதவும். அத்துடன் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு தமது வகைக்கூறலையும், பொறுப்புக்களை யும் நோக்க இலக்கு தொடர்பாக அவர்களது வெற்றி தோல்வி களையும் இனங்கான உதவும் பிரச்சினைகளைத் தீர்த்தல்/ அங்கத்தவர்களின் மனக்குறைகள் ஒரு சங்கத்தின் வெற்றி தோல்வியானது அதன் முகாமைத்துவத் திலும் அங்கத்துவத்திலும் தங்கியுள்ளது. சங்கத்தின் நோக்கங்களை யும் இலக்குகளையும் பிரயோகரீதியாக முழுமை பெறச்செய்வதற்கு வினைத்திறனான பெறுபேற்றினை காட்டவும், தீர்மானக்குழுவுக்கு அதனது வெற்றிகளை காட்டவும் முடிகின்றது.

சங்கத்தின் அடிப்படையான தொழிற்பாடாக அமைவது அங்கத்தவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலுக்கூடாக சகோதரத்துவத்தை வளரத்தலும், தொழில் தளத்தில் சூழநிலையை உருவாக்குதலுமாகும்.. சங்கத்தின் தலைமைத்துவம் சங்கத்தின் சகல மட்டங்களிலும் அமைதி, சகோதரத்துவம் நிலவ உற்சாகப்படுத்த வேண்டும். இது தேசிய , சர்வதேசிய மட்டத்தில் வெற்றிகரமான சங்கமாக திகழ அவசியமானதாகும்.

பயிற்சி நிகழ்ச்சிகள்,செயலமர்வு., பயற்சிபட்டறை.

பெரும்பான்மையான அங்கத்தினர்கள் கல்விக் கொள்கையின் பரப்பு, அவர்களது உரிமைகள், கடமைகள் அமைப்பின் தகவல்கள் போன்றவை அறியாதுள்ளனர். அநேகமான சந்தர்ப்பங்களில் அவர் களுக்கு கொடுக்கப்படும் தகவல்கள் போதுமானதல்ல அல்லது பிந்திய தகவல்களே கொடுக்கப்படுகின்றன. விசேடமாக சிறிய நகரங்களிலும் கிராமங்களிலும் அங்கத்தவர்களை ஒன்றினைத்து கூட்டம், செயலமர்வு, பயிற்சிப்பட்டறை நடாத்துதல் வேண்டும். இவ்வாரான செயற்பாடு தமது தொழில்வாண்மைபற்றிய விடயங் களை அறிய முடிகின்றது. ஒருமுறை இவ்வாறு நடாத்தும் போது தமது திட்டங்களையும் உத்திகளையும் சரியாக புரிந்துக் கொண்டு சிறந்த ஒரு ஆசிரியராக பணிபுரிய முடியுமாகின்றது.




நலன்புரி சேவைகள்

எந்த ஒரு சங்கமும் குறைந்த செலவில் ஒதுக்கப்பட்ட நேரத்துக்குள் அதன் இலக்கை அடைய செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். தொழிற் சங்கம் ஒவ்வொரு வருட இறுதியிலும் அதன் அபிவிருத்தி தொடர்பாகவும் அடைவு தொடர்பாகவும் மதிப்பீடு செய்து அங்கீகரித்து, அதை சிறப்பாக செய்த தகுதியுள்ள, அங்கத்தவர்களுக்கு வெகுமதிகள் அளிப்பதன் மூலம் சங்கத்தை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லமுடியும். இது குடும்ப உதவி, உயர்கல்விக்கு புலமைப்பரிசில், போன்றவகையில் தகுதியுள்ளவர்களுக்கு வழங்க நலன்புரிசேவை அமைதல் வேண்டும். இவ்வாறான செயற்பாடு சங்கத்தின் இலக்கை குறைந்த காலத்தில் மிக சிறப்பாக கொண்டு நடாத்த உதவியாக அமையும்.

ஆய்வு நிலையமும் வாசிகசாலையும்

அணைத்து சங்கங்களும் உலக நாடுகளிலிருந்து சேகரித்த தகவல்களையும் தரவுகளையும் அண்மைக்கால வெளியீடுகள் அடங்கிய வாசிகசாலையையும், ஆய்வு நிலையத்தையும் தமக்கென்று சொந்தமாக கொண்டிருத்தல் வேண்டும்.
காலத்துக்கு காலம் செய்யப்படும் ஆய்வகள் மூலம் சங்கத்தின் நன்மதிப்பு அதிகரிப்பதுடன் தங்கியிருக்கம் தன்மை குறைந்து, சங்கத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தவும், அங்கத்தினர்களின் திறனை ஊக்குவிக்கவும், அவர்களது இயலுமான தன்மையை அதிகரித்து அவற்றை சங்க நன்மைக்காக பயன்படுத்தவும் முடியும்.
இது அவர்களை புதிய ஆக்கத்திற்கு வழிவகுப்பதோடு மனிதவள சுரண்டலிருந்து பாதுகாத்து உச்சபெறுபேற்றை கொடுக்ககூடியதாக சங்கத்திற்கு உதவக்கூடியதாவுள்ளது.

வேறு தேசிய சர்வதேச சங்கங்களுடன் நட்புறவான தொடர்பு

மிக பெரிய அளவில் தமது அங்கத்தவர்களும், சமூகமும் நன்மை பெற்றுக் கொள்ளவும் ,அபிவிருத்தி அடையவும் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் சுயமாக இணைந்து செயற்படும் ,அமைப்புக்களுடன் உறவு கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எந்தவொரு சங்கமும் அதனது அடைவுகளையும் அங்கீகாரத்தையும் மட்டும் பெற்றுக்கொண்டால் போதாது. தேசிய மட்டத்திலும் சர்வதேசிய மட்டத்திலும் அதனது இணைப்பு , ஏற்றுக்கொள்ளல், நெகிழ்ச்சியான தன்மையை பெற்றுகொள்வதும் சிறப்பாக அமையும். இந்த உறவு சங்கத்தின் செயற்பாடு ,முகாமை போன்ற இயலுமான தன்மையை, உலகரீதியாக சகோதரத்துவ சங்கங்களுடன் பகிர்ந்துக்கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

தொழிற்சங்க தொழிற்பாட்டில் பின்வருவனவும் உள்ளடக்கப்படும்
கல்வி:
அங்கத்தவர்களது பொது கல்வியை விருத்தி செய்வது சங்கத்தின் பிரதான செயற்பாடாகும். இது பொது கல்வியாக அல்லது தொழிற்சங்க கல்வியாக அமையலாம்

சட்டஉதவியும் ஆலோசனையும் :
சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தொழில் நட்டஈடு தொடர்பாக வழக்கில் சட்ட உதவியும் வழங்கப்பட வேண்டும்.

தனி தனியாக அங்கத்தவர்களுக்கு உதவுதல்:

அங்கத்தவர்களுக்கு தமது தொழில் தொர்பாக உதவியும், ஆலோசனைகளும் தொடர்ச்சியாக தேவைப்படும். தொழில்தருனரின் முகாமையால் எடுக்கப்படுகின்ற ஒழுக்காற்று நவடிக்கை ,சேவையில் பதவி இறக்கல், பழிவாங்கல்போன்ற சந்தர்ப்பங்களில் அங்கத்தவர்களுக்கு இதற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு சங்கத்தின் ஆலோசனையும் உதவியும் தேவைப்படும்.

பாரிய சமூக,பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் :

ஒட்டு மொத்தமான சம்பளம் ,கூலி பெறுபவர்களின் சமூக , பொருளாதார நிலைமைகள் தொடர்பாக சங்கம் கவனம் செலுத்த வேண்டும். விலைமட்டம் , பொதுவான சம்பள மட்டம் , சமூக பாதுகாப்புக்கான பங்களிப்பு, கல்விக் கொள்கைகள் போன்றனவற்றின் அபிவிருத்தி பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

## சங்கத்தை வழிநடாத்துவதற்கு பிரதானமாக தேவைப்படுவது எது?

## இலக்கு நோக்கிய தலைவர்

பலம்வாய்ந்த அமைப்பை கட்டியெழுப்பவும் வெற்றிகரமான தலைமைத்துவம் உருவாகவேண்டுமாயின் பிழையற்ற தூரநோக்கு, இலக்கு, அர்ப்பணிப்பு, உயரிய எதிர்பார்ப்பு, ஈடுபாடு, ஊக்கமுடைமை ஆகிய அடிப்படையான அம்சங்கள் ஒரு தலைவருக்கு இருக்க வேண்டும். தொழில் தருனருடன் சுதந்திரமாக பேரம்பேசலில் ஈடுபடும் இயலுமை தொழிலாளரின் உரிமையை பலப்படுத்தும் ஆற்றல் இருக்கும் அதேவேளை சங்கத்தின் துரநோக்கு , கொள்கை ஆகியவற்றில் மிக தெளிவு இருத்தல் வேண்டும். உலகமயமாதல், பிரதேச , தேசிய பொருளாதாரம், தொழில்நுட்ப சமூகம் ,புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேற்றம் காணும் ஆற்றல் ,சிறப்பான பயிற்சி ஆகியவற்றுடன் உயர்கல்வியை தொடர்ந்தவராக இருக்க வேண்டும். தலைவர் தனக்குகீழ் இயங்கும் கீழ்மட்ட நிர்வாகிகளினதும், அங்கத்தவர்களினதும் நம்பிக்கையை வென்றவராக இருக்க வேண்டும். அவர் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை வகைகூறலுக்கூடாக நிறைவேற்றுபவராகவும் பொருத்தமான தீர்வுகளை ஆலோசனையாக வழங்கக்கூடியவராகவும் , சங்கத்தை அபிவிருத்தியுடன் விரிவாக்கம் செய்யக்கூடியவராகவும், சங்கத்திற்கான பல சக்திகளையும் ஒன்று திரட்டுபவராகவும் இருப்பது முக்கியமாகும்.

## அலுவலகம்

நாளாந்த செயற்பாடுகளை அனைவருக்கும் வழங்க கூடிய வகையில் சகல தொடர்பாடல் வசதிகளையும் எவருக்கும் தடையின்றி வழங்கக்கூடியதாக சங்கத்திற்காக சொந்த இடம் கொண்டிருக்க வேண்டும். பாதுகாப்பு, சுகாதார வசதிகள், வேலை செய்வதற்கான சூழல் , இடவசதியுடன் கூடிய களஞ்சியவசதி, போதியளவு வெளிச்சம் போன்றன காணப்படல் வேண்டும்.

## அலுவலக உபகரணங்களும் இயந்திரங்களும்

உலகமயமாதலினால் புதிய பரிமானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு வசதிகள் கணினி இனையதளவசதிகள், ஈமெயில், பெக்ஸ் வசதிகள் கொண்டதான தகவல்களை இற்றைப் படுத்தக்கூடிதாக இருப்பது சங்கவளர்ச்சிக்கு மிகவும் உறுதுணை யாக இருக்கும். தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் மிக குறைந்த செலவில் குறைந்த காலத்தில் பாரிய அபிவிருத்தியை சங்கம் ஆற்றிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

## அலுவலக பணியாளர்கள்

நாளாந்த பணிகளை நிறைவேற்றத்தக்க வகையில் சங்க நிர்வாகிகளைவிட மேலதிகமாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்
பெரும்பாலும் சங்க பணியாளர்கள் பாடசாலைகளில் முழுநேரமாக சேவையாற்றுவதால் சங்க அலுவலகத்தில் நாளாந்த கடமைகளை ஆற்றுவது கடினமாயுள்ளது. தமது அலுவலகங்களில் பணியாளர் களை நியமிப்பதில் அவசரம் காட்டாது பொருத்தமானவர்கள் நியமிக்கும்வரை தற்காலிக, பகுதிநேர பணியாளர்கள் குறுகியகால அடிப்படையில் நியமிப்பது பொருத்தமானதாகும். நியமனம் வழங்கிய பின்னர் அவர்களுக்கு தொழிலாளர் சட்டவிதிகள், இழிவு வேதன விதிகள், சமூக பாதுகாப்பு விதிகள், தொழிலாளர் ஓய்வுகால சலுகைகள், தொழிலாளர் முகாமை உறவுகள் போன்ற பலவகையில் பயிற்சி வழங்கள் அவசியமாகும்.

குழுக்கள்

பல்வேறு மட்டங்களில் பல்வேறு பொறுப்புக்களை நிறைவற்றுவதற் காக பல குழுக்களை நியமிப்பதில் விசேட கவனம் செலுத்த வேண்டும். இக்குழுக்கள் மனக்குறைகளுக்கு தீர்வு காண்கின்ற அதேவேளை சங்கத்தைப் பலப்படுத்த பின்வரும் செயற்பாடுகளை யும் ஆற்றவேண்டியுள்ளது.


- சங்கத்தின் ஒற்றுமையை கட்டிக்காத்தல்
- இன்னும் சங்க அமைப்பிற்குள் வராத துறைகளை விரிவுபடுத்தல்
- சங்கத்திற்குள் தொடர்பாடலை விருத்தி செய்தல்
- தகவல்களை சேகரிக்கும் திறனை விருத்தி செய்தல்
- கல்வி மற்றும் பயிற்சி செயற்பாடுகளை விரிவாக்கல்
- புதிய அங்கத்தினர்களுக்காக புதிய சேவைகளை அறிமுகப்படுத்தல்

நிதி:

அணைத்து சங்கங்களிலும் மின்சார செலவு, தொலைபேசி செலவு, பணியாளர் சம்பளம், போக்குவரத்துச் செலவு, கூட்டம். மகாநாட்டு செலவுகள், சில்லறைசெலவு போன்ற நிலையான, மாறும் செலவுகளை ஈடு செய்யத்தக்கவகையில் நிதி இருப்பது அவசியமாகும். சங்கம் நிதியில் சுதந்திரமாக இருக்க வேண்டு மானால் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவப்பணத்தை உரிய திகதியில் செலுத்த வேண்டும் அத்துடன் பாரம்பரிமற்ற முறையிலும் தேவையான நிதியை திரட்டுவதற்கு சங்கம் முற்பட வேண்டும்.

இவையெல்லாம் ஒரு சங்கம் வினைத்திறனாக செயற்படுவதற்கு அவசியமானவையாகும். இவற்றை பூரணமாக கொண்டிருக்கும் சங்கம் வினைத்திறனாகவும், அரச அலுவலர்களுடனும், வேறு தொழிற்சங்கங்களுடனும், தமது சமூகத்திலும் நன்மதிப்பு பெற்றதாகக் காணப்படும்.

# Functions & Requirments of the Union



உள்ளீர்ப்பு தொடர்பாக ஏழு படிமுறைகள்

**R-** ஆய்வு - உங்கள் சங்கத்தினை பற்றிய முழுமையான தகவல்களை திரட்டுங்கள். அதன் கொள்கை என்ன? அவர்கள் என்ன செய்ய போகின்றார்கள்? அங்கத்தவர்கள் அல்லாதவர்கள்யார்?

**E-** மதிப்பீடு - அங்கத்தவர்கள் அல்லாதோரை அனுகக்கூடியவர் யார்? அதற்கு உசிதமான காலம் எப்போது?

**C-** தொடர்பு கொள்ளல்- நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நேருக்கு நேர் சந்தித்தல் பொருத்தமானது. நண்பராகுங்கள். ஆக்கிரமிப்பாளராய் இருப்பதை தவிருங்கள்

**R-** காரணம் அவர்/அவள் சங்கத்தில் இணைவதன் அவசியத்தை தெளிவுபடுத்துங்கள்.

**U** - தெளிவு - நீங்கள் கூறிய அணைத்தும் தெளிவாக புரிந்துக் கொண்டாரா என்பதை தெளிவு படுத்திக்கொள் ளுங்கள். அத்துடன் வினாக்கள் வினாவி தெளிவு பெற்றுக் கொள்வதற்கு அவருக்கு சந்தர்ப் பங்கள் வழங்குங்கள்

**I** - அழைப்பு - அவருடன் நண்பராகி அவரை சங்கத்தில் இணைந்துக் கொள்ள அழையுங்கள்

**T -** கைபற்றுங்கள் அவர்/அவள் உடன்பட்டால் விண்ணப்படிவ த்தை கொடுத்து சந்தாப்பணத்தைப் பெற்றுக் கொண்டு சங்கம் பற்றிய கையேட்டை கொடுங்கள்.

ஒரு தலைவருக்குறிய பண்புகள்
**LEADER** என்பதன் அர்த்தம்

**L**oyal பராபட்சமற்றவர்
**E**nthusiastic ஆர்வமிக்கவர்
**A**pproachable இலகுவாக அணுகக்கூடியவர்
**D**edicated அர்ப்பணிப்பு உள்ளவர்
**E**ncouraging மற்றவரை தைரியப்படுத்தக்கூடியவர்
**R**esourceful எதையும் கையாளக்கூடியவர்

# அத்தியாயம் IV

## தொழிற் சங்கத்தில் இணைதல்
## பெண்களுக்கு இது ஏன் அவசியம்?

ஆண்களுக்கு சரிசமமாக தொழிற்சங்கத்தில் இணையும் உரிமை பெண்களுக்கும் உண்டு. பலம்வாய்ந்த சங்கம் பெண்களின் உரிமையை பாதுகாக்க முடியும். ஆனால் ஒழுங்கமைக்கப்பட்ட சங்கத்தில் அவர்கள் அங்கத்தவராவும், உற்சாகமாக செயற்படுவோராகவும் இருக்கும் போதே இது சாத்தியமாகும்.

தொழிற் சங்கம் பெண்களுக்காக என்ன செய்ய முடியும்?

- முகாமையுடன் கலந்துரையாடும் போது அவர்களுக்காக அழுத்தமாக குரல் கொடுத்தல்
- தொழில் தருனர்கள் அவர்களை சாதாரணமாக நடத்துதலை உறுதிப்படுத்தல்
- உயரிய சம்பளம், உயரிய தொழில் நிலைமைகள் பெண்களுக்கு கிடைப்பதற்கு பேரம் பேசுதல்
- பெண்களுக்கெதிராக தொழில் செய்யுமிடத்தில் எழும் வண்முறைகளை முடிவுக்கு கொண்டுவரல்.
- தொழில்தருனருடன் தாய்மாருக்குறிய பிரசவ பாதுகாப்பு, பிள்ளைபராமரிப்பு வசதிகள் போன்றவற்றுக்காக பேரம் பேசுதல்.
- பெண்கள் உரிமை, தொழில் உரிமை தொடர்பான பயிற்சியும் , கல்வியும் வழங்குதல்
- தொழில் தளத்தில் பாதுகாப்பையும் , சுகாதாரத்தையும் மேம்படுத்தல்.
- வேறு அமைப்புக்களுடன் இணைந்து முழு சமூகத்துக்கும் உரித்தான பெண்கள் உரிமையை நிலைநாட்ட ஒத்துழைத் தல்.

## அங்கத்தவர் என்றவகையில் உங்களுக்குறிய உரிமைகள் என்ன?

உங்கள் அங்கத்துவ பணத்தை செலுத்தி சங்கத்தில் இணைந்ததும் ஜனநாக உரிமைமை சங்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவையாவன..

- உங்களை சங்கத்தின் கூட்டங்களுக்கு அழைக்கவும், உங்களுக்கு வசதியாக கலந்துக் கொள்ளக் கூடியதாக அமைதல் வேண்டும்.
- உங்களது எண்ணங்களை எடுத்தியம்ப முடியும்.
- சங்கத்தைப்பற்றி தகவல்களை பெற்றுக்கொள்ளவும் அது எவ்வாறு இயங்குகின்றது என்பதை தெரிந்துக் கொள்ளவும், அதில் நீங்கள் எவ்வாறு பங்கு பற்ற முடியும் என்பது பற்றியும் அறிந்துக்கொள்ள முடியும்.
- தொழில்தருனருடன் உங்கள் சார்பாக கலந்துரையாட முன்னர் உங்களது தொழில்நிலைமை, சம்பளம் போன்றன பற்றி ஆலோசனை பெறமுடியம்.
- உங்களது தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளை எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும் என்பது பற்றி அறிய முடியும்
- தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் தேர்தலில் பங்கேற்க முடியும்.
- உங்களுக்கு மனக்குறைகள் ஏற்படுமிடத்து அல்லது உங்கள் தொழில்தருனருடன் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மற்ற அங்கத்தவர்களுக்கு சங்கம் பிரதிநிதித்துவம் செய்வது போல உங்களது பிரச்சினையிலும் சங்கத்தின் பிரதிநிதித்து வத்தை பெற்றுக்கொள்வதற்கு முடியும்.
- சங்கத்தின் கொள்கைகளை வகுக்கும் கலந்துரையாடல் களில் கலந்து கொள்வதற்கு முடியும்.
- சங்கத்தின் தொழிற்சங்க கல்வி, பயிற்சிகள் தொடர்பான நிகழ்வுகளில் பங்குபற்ற முடியும்.

## அதிக பெண்களை சங்கத்தில் இணைத்துக் கொள்வது எப்படி?

தொழிற்சங்கத்தால் பெண்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய உதவிகள் ஒத்தாசைகள் பற்றி தெளிவுபடுத்துவது. இவற்றை சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெண் உறுப்பினர்கள் தனிப்பட்டமுறையில் தொடர்பு கொண்டு தெளிவு படுத்துவதே உசிதமாகும்.

அண்மையில் மேற்கொண்ட தொழிற்சங்க ஆய்வின்படி பெண்களில் பெரும்பான்மையினர் எப்படி தொழிற்சங்கத்தில் இணைவது என்பது பற்றியோ , அதில் தமக்கு கிடைக்கும் நன்மை பற்றியோ, தொழிற்சங்கத்தின் செயற்பாடு பற்றியோ தெளிவில்லாதிருக்கின்றனர்.

## இது தொடர்பாக பெண்கள் என்ன செய்வேண்டும்?.

கலந்துரையாடல் நடாத்துதல்

- பெண்தொழிலாளர்களுக்கு முக்கியமான பிரச்சினை தொடர்பாக வேலைத்தளத்தில் கலந்துரையாட தொழிற்சங்கம் முன்வருதல்

- முக்கிய பிரச்சினை என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு கலந்துரையாடல் நடாத்துதல் அல்லது, கற்றல் குழுவை நியமித்து மதிப்பீடு செய்தல் அல்லது ஆய்வு செய்தல்.
- இலகுவாக தீர்க்கக்கூடிய பிரச்சினையை அடையாளம் கண்டு தீர்ப்பதோடு பிரச்சினையில் சங்க செயற்பாடு பற்றி எடுத்துக்கூறல்.

## தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல்

- சங்கம் தொடர்பாக இலகு விளக்கம் கொண்ட கையேடுகள் துணையுடன் இலக்கு நோக்கிய குழுவை அணுகுங்கள். சங்கம் பற்றி போதிய விளம்பரம் தொழிலாளர் மத்தியில் இல்லையெனில் முறையில் (Informal) அனுகுமுறையில் அவர்களது மதியபோசன இடைவேளையில் அவர்களுக்கு தேவையான ஒரு பிரச்சினைபற்றி கலந்துரையாடுங்கள் உதா: பெண்களின் சுகாதாரம்.

- உங்களுடன் தொடர்புடைய அங்கத்தவர்களுடன் தொடர்சியான தொடர்புகள் பேணப்படுவதடன் பொதுவாக பெண்களுக்கு மட்டுமன்றி ஆண்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் எந்தவகையான செயற்பாடுகளை மேற்கொள்வது என்று கலந்துரை யாடல் நடாத்துவது பொருத்தமானது.

- தொழிற்சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக பத்திரிகை அறிக்கையோ, விவரண கையேடோ வெளியிடுவது பொருத்தமானது. பெண்தொழிலாளர்களுக்கு இத் தொழிற்சங்கத்தினால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளை பற்றிய தகவல்கள் கையேடுகளில் உள்ளடங்கியுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியது முக்கியமாகும்.

## விசுவாசமும் நம்பிக்கையும் பேணுவது எவ்வாறு?

- உங்களது தொழிற்சங்கத்தில் தலைவர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்கின்ற முறைபற்றிய தெளிவான தகவல்களை அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

குறிப்பாக

  - சங்கத்தின் தலைமைப் பதவிக்கு அங்கத்தவர்கள் விண்ணப்பிக்கும்முறை
  - எங்கே எப்போது தேர்தல் நடாத்தப்படும் என்பது
  - தேர்தலின் பெறுபேறு என்ன என்பது

- உங்களது சங்கத்தின் நிதி தொடர்பான தகவல்களை தொடச்சியாக வழங்கப்படுகின்றது என்பதை உறுதி செய்வது முக்கியம்.
  - தேசிய மட்டத்திலும், கிளைகள் மட்டத்திலும் வருமானம் எவ்வாறு பகிரப்பட்டது என்பது.
  - வருமானம் செலவழித்த முறையும் அதற்கான கணக்கீட்டுப் பதிவும்.

## பெண் தொழிலாளர்களுக்கு தொழிற்சங்கத்தில் இருப்பதால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள்

- தொழிற் சங்கம் செயற்படும் நிறுவனத்தில் தொழிலாளர்கள் பெறும் வருமானம் தொழிற் சங்கம் செயற்படாத நிறுவனத்தில் தொழிலாளர்கள் பெறும் வருமானத்தை விட அதிகமானதாகும்.

- தொழிற் சங்கம் செயற்படும் நிறுவனத்தில் தொழிலாளர்கள் பெறும் பாதுகாப்பு அதிகமாக காணப்படுகின்றது.

- அதிகமான சலுகைகளை அனுபவிக்கின்றனர் உதா: சுகாதார சலுகைகள், ஓய்வூதியம் , சம்பளத்துடன் கூடிய பிரசவ விடுமுறை , நெகிழ்வான வேலைநேரம்.

- சமமான உரிமைகளை பெற்றுக்கொள்வதில் ஊனமுற்றவர்கள் அதிக நன்மைகளை பெற்றுக் கொள்கின்றனர்.

## உங்கள் தொழிற்சங்கத்தின் செயற்பாட்டில் நீங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும்

பின்வரும் வகையில் செயற்படலாம்

- முகாமையுடன் கலந்துரையாடும் போது பெண் தொழிலாளரின் அபிப்பிராயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கதைக்க வேண்டும்.

- தொழில்தருனரின் அசாதரணமான பாரபட்சத்தை எடுத்துக் காட்டி கலந்துரையாடல்.

- உயரிய சம்பளத்திற்காகவும், உயரிய வேலை நிலைமைகளுக்காகவும் பேரம் பேசுதலில் ஈடுபடல்.
  குறிப்பாக குறைந்த வேதனம் பெறும் பெண் தொழி லாளர்களின் நிலைய அறிதல் வேண்டும்.

- பெண்களுக்கெதிரான பாரபட்சம் காட்டல் தொடர்பாக பயிற்சி பட்டரைகளிலும், வேலை மதிப்பீட்டின்போதும் பிரயோகரீதியான விடயங்களை முன்வைத்து பாரபட்சம் காட்டலை குறைத்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்

- தொழில்தருனருடன் பிரசவபாதுகாப்பு, பிள்ளைபராமரிப்பு வசதிகள் தொடர்பாக பேரம் பேசுதல்

- வேலைத்தளத்தில் பாதுகாப்பு நிலைமைகளையும் சுகாதாரவசதிகளை மேம்படுத்தல்.

- வேலைத்தளத்தில் நடைபெறும் பெண் துஸ்பிரயோகத் திற்கெதிராக குரல் கொடுத்தல்.

- உங்களது சகோதர சேவையாளர்களின் பிரச்சினை களை இன்னும் சிறப்பாக கையாள தொழிலாளர்களின் உரிமைகள் பற்றியும், பெண்களின் உரிமைகள்பற்றியும் கற்றலில் ஈடுபடவேண்டும்.
- பெண்களின் உரிமைகளை அபிவிருத்தி செய்ய சமூகத்தில் காணப்படும் எனைய அமைப்புக்களுடன் இணைந்து செயற்படல்.

**in Partnership with**
**Edcation international and**
**Canadian Teacher's Federation**

***Tamil Translation By***
***S. Balasubramaniyam***
***(CTTU Vice President)***

